Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125
DHINATH DHALAM Tamil & English daily Paper



**செய்தியாளர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 · இதழ் Issue : 139 · சனிக்கிழமை Saturday · 21.03.2026 · பக்கங்கள் Pages:4 · ₹6 · ஈரோடு Erode

# சுயநலனுக்காக கட்சியை டெல்லியில் அடமானம் வைத்த பழனிசாமி

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு




சென்னை: அதிமுக பொதுச்செயலாளரின் டெல்லி பயணத்தை கடுமையாக விமர்சித்துள்ளார் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

தமிழ்நாட்டில் சட்டமன்றதேர்தல்தேதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அனைத்துக் கட்சிகளும் தொகுதி பங்கீடுகள், வேட்பாளர் நேர்காணல் உள்ளிட்ட பணிகளில்தீவிரம்காட்டி வருகின்றன. இந்நிலையில் திமுகவின் கடந்த 5 ஆண்டுகால ஆட்சியின் சாதனைகள் குறித்தும், கூட்டணி கட்சிகளுடனான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை மற்றும் வேட்பாளர் நேர்காணல் குறித்தும் முதலமைச்சர் மு.கஸ்டாலின் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், "தமிழ்நாடு–2030 எனும் தொலைநோக்குத் திட்டத்தின் அடிப்படையில், கூடுதல் அம்சங்களுடன் 2026 சட்டமன்றத் தேர்தல் களத்திற்கான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கை வெகு விரைவில் வெளியாக இருக்கிறது. எந்த தேர்தல் களமாக இருந்தாலும், நமது கழகத்தின் அறிக்கை மக்களின் நம்பிக்கையை பெறக்கூடிய அறிக்கையாக இருக்கும்.

2021 முதல் 2026 வரையிலான 5 ஆண்டுகால ஆட்சியில், இந்தியாவில் எந்த மாநிலமும் செய்ய முடியாத சாதனைகளையும், திட்டங்களையும், முன்னேற்றங்களையும் திராவிட மாடல் அரசு செய்திருப்பதை பரப்புரை செய்யும் கழகத்தினர் அனைவரும் எடுத்துரைக்க வேண்டும். கழகத் தகவல் தொழில்நுட்ப அணியினர் ஒவ்வொரு நாளும் சமூக வலைதளங்களில் கழக அரசின் சாதனைகளைப் பதிவிட்டு, அனைத்துத் தரப்பு மக்களிடமும் அதனைக் கொண்டு சேர்க்க வேண்டும். கடந்த ஐந்தாண்டு காலத்தில் சிறப்பான ஆட்சி நடத்துவது நமக்கு எளிதாக இல்லை. தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசின் தமிழர் விரோத – பழிவாங்கும் போக்கினால் ஏற்பட்ட பாதிப்புகளை எதிர்கொண்டு எண்ணிக்கையில் அடங்காத சாதனைத் திட்டங்களை நிறைவேற்றி யிருக்கிறோம். அதனால்தான், 2026 தேர்தல் களத்தைத் தமிழ்நாடு அணிக்கும் டெல்லி அணிக்குமான தேர்தல் என்றுதொடர்ந்துசொல்லிவருகிறேன்.

ரூபிப்பது போலவே, டெல்லியில் இருந்துதான் எல்லாம் முடிவு செய்யப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவரும் அவரது சகாக்களும் டெல்லியில் இருப்பது எதற்காக? தமிழ்நாட்டிற்கு வழங்கப்படாமல் வஞ்சிக்கப்படும் நிதியை வாங்கித் தருவதற்காகவா? தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படாமல் முடக்கப்பட்டிருக்கும் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்துவதற்காகவா? மாநில உரிமைகளைக் காப்பாற்றுவதற்காகவா? சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காகவா? இல்லை.. இல்லை.. இல்லவே இல்லை. தமிழ்நாட்டில் உள்ள வீடுகளில் அடுப்பு எரிந்தால் என்ன, எரியாவிட்டால் எங்களுக்கென்ன என்ற மனநிலையுடன்தான் எதிர்க்கட்சியினர் தங்களது கூட்டணிப் பேச்சுவார்த்தையை நடத்திக் கொண்டிருக்கிறனர். தேர்தல் களத்தைச் சந்திப்பதற்கே டெல்லியின் சம்மதம் வேண்டும் என்ற நிலையில் உள்ளவர்களின் கைகளில் தமிழ்நாடு சிக்கிக்கொண்டால் ஒவ்வொரு நாளும் என்ன பாடுபட வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்துள்ள தமிழ் மக்கள் ஒருபோதும் டெல்லியின் ஆதிக்கத்தையும், அதன் அடிமைக் கூட்டத்தையும் அனுமதிக்க மாட்டார்கள்.

தமிழ்நாட்டின் உரிமைகளைக் காப்பதற்கும், தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்குமான வலிமை திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கே உண்டு என்பதே மக்களின் உறுதியான நம்பிக்கை. அந்த நம்பிக்கையை உருவாக்கியது திராவிட மாடல் ஆட்சி" என்று குறிப்பிட்டுள்ளார்.




# தமிழ்நாட்டில் அரசு பேருந்துகள் விபத்துக்குள்ளாவது தொடர்கதையாகி வருகிறது; எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு



கோயம்புத்தூரில் இருந்து சேலம் நோக்கி பயணிகளுடன் இன்று (20.03.2026) அரசுப் பேருந்து சேலம் மாவட்டம் அரியானூர் பகுதியில் உள்ள உத்தம சோழபுரம் அருகே தேசிய நெடுஞ்சாலையில் கொண்டிருந்தது. அப்போது திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து சாலையின் நடுவே இருந்த தடுப்பைத் தாண்டி எதிர்த் திசையில் பாய்ந்தது. அச்சமயத்தில் அங்கு வந்து கொண்டிருந்த டெம்போ மற்றும் இருசக்கர வாகனம் மீது பேருந்தானது பயங்கரமாக மோதியது. இந்த பயங்கர விபத்தில் 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இதனையடுத்து இந்த விபத்து சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை7ஆகஅதிகரித்துள்ளது. அதாவது பைக்கில் இருந்த தாய், மகன் ஆகிய இருவரும் டெம்போவில் பயணித்த 11 மாதக் குழந்தை, 5 வயது சிறுமி உள்ளிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த5பேர்எனமொத்தமாக 7 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்து குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற கொண்டலாம்பட்டி காவல்துறையினர், உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காகச்சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அதோடு இந்த விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த விபத்தின் போது அங்கிருந்த சி.சி.டி.வி. கேமராவில் பதிவான காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகிப் பார்ப்போரின் மனதைப் பதைபதைக்க வைக்கிறது. அரசுப் பேருந்து கட்டுப்பாட்டை இழந்து ஏற்படுத்திய விபத்தில் சிக்கி 7 பேர் பலியான சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த விபத்து தொடர்பாக நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணையில் குழந்தைக்கு மொட்டை போட குலதெய்வம் கோயிலுக்குச் செல்லும் போது அரசுப் பேருந்து மோதி விபத்து நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக அதிமுக பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி எக்ஸ் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "சேலம் – உத்தமசோழபுரம் பகுதியில், கோயம்புத்தூரிலிருந்து சேலம் நோக்கி வந்த தமிழ்நாடு அரசு பேருந்து திடீரென கட்டுப்பாட்டை இழந்தது. சாலையோர தடுப்பைஉடைத்துஎதிர்புறம் சென்ற வாகனங்கள் மீது அதிவேகமாக மோதியதில் 7 பேர் உயிரிழந்தனர் என்ற செய்திகள் வருகின்றன. வருத்தத்திற்குரிய இத்தகவல் அறிந்து மிகுந்த துயருற்றேன். தமிழ்நாட்டில் அரசுப் பேருந்துகள் விபத்துக்குள்ளாவது தொடர்கதையாகி உள்ள நிலையில், இந்த ஆட்சியில் அரசுப் பேருந்துகள் முறையாக பராமரிக்கப்படவில்லை என்பதையே இந்த சம்பவம் மீண்டும் ஒரு முறை நிரூபித்திருக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அதிமுக சார்பில் எனது ஆழ்ந்த இரங்கலையும் வருத்தங்களையும் தெரிவித்துக்கொள்வதுடன், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவோர் விரைவில் பூரண நலம்பெற்று இல்லம் திரும்ப இறைவனை வேண்டுகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

# பிரீமியம் பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.2 அதிகரிப்பு



புதுடெல்லி:

பிரீமியம் பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.2 உயர்த்தி ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனம் அறிவித்துள்ளது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது தாக்குதலை தொடங்கியதை அடுத்து, இரு தரப்புக்கும் இடையேயான போர் 21-வது நாளாக நீடித்து வருகிறது. ஈரானின் முக்கிய எண்ணெய் வயலை இஸ்ரேல் தாக்கியதால், கத்தாரின் மிகப் பெரிய எண்ணெய் வயலை ஈரான் தாக்கியது. மேலும்,ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கி உள்ளது. இதன் காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தது. தற்போதும் ஏற்ற இறக்கங்களுடன் கச்சா எண்ணெய் விற்பனை யாகி வருகிறது. , பிரீமியம் பெட்ரோலின் விலை யை லிட்டருக்கு ரூ.2 உயர்த்தி ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனம் அறிவித்துள்ளது. அதேநேரத்தில், விலை உயர்வுக்கான காரணத்தை அது தெரிவிக்கவில்லை. எனினும், சாதாரண பெட்ரோலின் விலையில் மாற்றம் எதையும் அது செய்யவில்லை.

இந்தியாவில் கச்சா எண்ணெய்க்கு தட்டுப்பாடு இல்லை என எண்ணெய் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. அதேநேரத்தில், அவற்றின் விலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

பிரீமியம் பெட்ரோல் என்றால் என்ன?

வாகனத்தின் என்ஜினின் செயல் திறன் சிறப்பாக இருப்பதற்காகவும், மேம்பட்ட மைலேஜுக்காகவும் பயன்படுத்தப்படுவது பிரீமியம் பெட்ரோல் எனப்படுகிறது. சொகுசு வாகனங்கள், ஸ்போர்ட்ஸ் வாகனங்கள், உயர் செயல்திறன் கொண்ட கார்கள் ஆகியவற்றில் இத்தகைய எரிபொருள் பயன்படுத்தப்படுகிறது. ஆக்டேன் எரிபொருள் அல்லது பவர் பெட்ரோல் என்றும் இது அழைக்கப்படுகிறது. ஹிந்துஸ்தான் பெட்ரோலியத்தின் இந்த விலை உயர்வு, வசதி படைத்த வாடிக்கையாளர்களையே பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக, ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனம் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "கச்சா எண்ணெய் விநியோகத்தில் எந்த இடையூறும் இல்லை. கூடுதல் சரக்குகள் ஏற்கெனவே வந்து கொண்டிருக்கின்றன. வரும் நாட்களில் இந்தியாவின் விநியோக நிலை மேலும் வலுப்படும். வதந்திகளை நம்பாதீர்கள். அதிகாரப்பூர்வ அறிவிப்புகளை நம்புங்கள்" என தெரிவித்திருந்தது.

ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல்கள் பாதுகாப்பாகச் செல்வதற்கு வழிவகுக்கும் முயற்சிகளில் முன்னணி ஐரோப்பிய நாடுகளும் ஜப்பானும் இணைய முன்வந்ததால், பேரலுக்கு 110 டாலராக உயர்ந்த கச்சா எண்ணெய் விலை 105 டாலராக குறைந்தது கவனிக்கத்தக்கது.

**செய்திகள் உடனுக்குடன் படிக்க**
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# சென்னை தாம்பரத்தில் பூண்டி பஜாரில் நிறுவப்பட்டுள்ள பெருந்தலைவர் காமராஜரின் திருவுருவச் சிலை மூடி வைக்கப்பட்டுள்ளது



சென்னை தாம்பரத்தில் பூண்டி பஜாரில் நிறுவப்பட்டுள்ள பெருந்தலைவர் காமராஜரின் திருவுருவச் சிலை மூடி வைக்கப்பட்டுள்ளது இதனை திறந்து வைக்க ஆவணம் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு தேர்தல் ஆணையாளர் திருமதி ஜோதி நிர்மலா சாமி இஆப அவர்களுக்கு தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத்தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் கடிதம் அனுப்பி உள்ளார்

அவர் அனுப்பி உள்ள கடிதத்தில் தமிழகத்தில் 23/04/2026 அன்று நடைபெறவிருக்கும் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தமிழகத்தில் மறைந்த தலைவர்களுடைய திருவுருவச் சிலைகளை மூடி வைக்க வேண்டாம் என்று தேர்தல் ஆணையம் தேர்தல் விதிமுறைகளாக அறிவித்த பிறகும் சென்னை தாம்பரம் பூண்டி பஜாரில் பாரத மாதா தெரு ஜங்சன் அருகில் நிறுவப்பட்டுள்ள பெருந்தலைவர் காமராஜரின் திருவுருவச் சிலையை மூடி வைத்து இருக்கிறார்கள் சென்னையில் பெரியார் அண்ணா எம்ஜிஆர் ஜெயலலிதா கலைஞர் போன்ற அரசியல் தலைவர்களின் திருவுருவச் சிலைகள் எல்லாம் திறந்து இருக்கிறது ஆனால் பெருந்தலைவர் காமராஜரின் திருவுருவச் சிலையை மட்டும் மூடி வைத்து இருக்கிறார்கள்

இந்த செயலானது பெருந்தலைவர் காமராஜரை இழிவுபடுத்தும் நோக்கத்தில் திட்டமிட்டு செய்ததாகவே கருதுகின்றோம் தேர்தல் ஆணையம் சிலைகளை மூடக்கூடாது என்று அறிவித்த பிறகும் காழ்ப்புணர்ச்சியோடு இது போன்ற செயல்களை செய்த நபர்கள் மற்றும் அதிகாரிகள் மீது தேர்தல் ஆணையம் துறை ரீதியான உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் மேலும் பெருந்தலைவர் காமராஜரின் திருவுருவச் சிலை மூடி வைத்திருப்பது மிகவும் வருத்தத்துக்குரிய செயலாக பார்க்கின்றோம் காமராஜரை இழிவு படுத்துகின்ற நோக்கத்தில் அந்தப் பகுதியில் உள்ள அதிகாரிகள் அல்லது தனி நபர்கள் இது போன்ற செயல்களை செய்து இருக்கிறார்கள் அதனால் தலைமை தேர்தல் ஆணையாளராகிய தாங்கள் தாம்பரம் பூண்டி பஜார் ஜங்சனில் மூடி வைக்கப்பட்டுள்ள பெருந்தலைவர் காமராஜரின் திருவுருவச் சிலையை திறந்து வைக்க ஆவண செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் சார்பில் அகரக்கட்டு லூர்து நாடார் தமிழ்நாடு தேர்தல் ஆணையர் திருமதி ஜோதி நிர்மலாசாமி அவர்களுக்கு கடிதமும் இமெயிலும் அனுப்பி உள்ளார்



சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூகநீதி சபை" மற்றும் "யுனெடெட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டி"யின் தேசிய தலைவர் ஆர். செல்வகணேசன் ஆலோசனை மற்றும் மாநில தலைவர் ஆர்.தன்ராஜ் வழிகாட்டுதலுடன், ஈரோடு மாவட்ட தலைவர் ஜெ .கோபிநாதன், ஈரோடு மாவட்ட செயலாளர் முனைவர் G.தங்கவேல் தலைமையில் ஈரோடு மாவட்டம், ஈரோடுவட்டம், சித்தோடு அரசு ஆரம்பசுகாதாரநிலையத்திற்கு உட்பட்டபேரோடு, எலவமலை, விருமாண்டம்பாளையம் காளிங்கராயன் பாளையம், லட்சுமி நகர், நசியனூர், கதிரம்ட்டி, பிச்சாண்டம் பாளையம் ஆகிய கிராமத்தில் பணியாற்றி வரும் சமுதாய நல செவிலியர், பகுதி சுகாதார செவிலியர், கிராம சுகாதார செவிலியர், என 20க்கும் மேற்பட்ட நபர்களுக்கு "WCWR ன் சிங்கப்பெண்" விருதுக்கான சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.




ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக முகப்பு பகுதியில் (20.03.2026) நேற்று மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு "வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை" மற்றும் 100 சதவீதம் வாக்குப்பதிவு குறித்து மகளிர் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுவினர்கள் பங்குபெற்ற விழிப்புணர்வு மனித சங்கிலியினை துவக்கி வைத்து, பங்கேற்றார்.

# மத்திய கிழக்கு நாடுகளில் தொடரும் போர்: பஹ்ரைனில் 18 நாட்களாக தவித்த 192 இந்தியர்கள் மீட்பு



சென்னை : இஸ்ரேல், அமெரிக்கா, ஈரான் இடையே நிலவி வரும், கடுமையான போர் சூழல் காரணமாக, பஹ்ரைனில் 18 நாட்களுக்கு மேல், தவித்துக் கொண்டிருந்த, 192 இந்தியர்கள் மீட்கப்பட்டு, சிறப்பு தனி விமானம் மூலம் நேற்று சென்னை வந்து சேர்ந்தனர்.

இஸ்ரேல், அமெரிக்கா, ஈரான் இடையே கடந்த பிப் .28-ம் தேதி போர் தொடங்கியதையடுத்து, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஐக்கிய அரபு நாடுகள், வளைகுடா நாடுகளின் வான்வழிப் பகுதிகள் மூடப்பட்டன.

இதனால், ஐக்கிய அரபு நாடுகள், வளைகுடா நாடுகளில் இருந்து விமான சேவைகள் இல்லாத காரணத்தால், பஹ்ரைன் நாட்டில் உள்ள தமி ஏராளமானவர்கள், இந்தியா திரும்ப முடியாமல், பஹ்ரைன் நாட்டில் தவித்துக் கொண்டு இருந்தனர்.

அவ்வாறு தவித்துக் கொண்டு இருந்தவர்களில் முதியோர், நோயாளிகள், குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள் ஆகியோர்களுக்கு முன்னுரிமை அளித்து, அவர்களை தனி சிறப்பு விமானம் மூலம், சென்னைக்கு அனுப்பி வைப்பதற்கு, பஹ்ரைனில் உள்ள தமிழ் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்பாடுகளை செய்தனர்.

பஹ்ரைன் தமிழ்ச் சங்கம்

ஆனால், பஹ்ரைன் நாட்டிலிருந்து சென்னைக்கு விமான சேவையை நடத்தி வரும் கல்ஃப் ஏர்வேஸ் விமான நிறுவனம், தற்போதைய சூழ்

நிலையில், பஹ்ரைனிலிருந்து விமான சேவை நடத்த முடியாது என்று கூறிவிட்டது.

அதேசமயம், பஹ்ரைன் அருகே உள்ள சவுதி அரேபியா நாட்டின் தமாம் நகரில் இருந்து சிறப்பு விமானத்தை இயக்குவதற்கு, கல்ஃப் ஏர்வேஸ் விமான நிறுவனம் சம்மதம் தெரிவித்தது. இதையடுத்து, பஹ்ரைன் தமிழ் சங்கத்தை சேர்ந்தவர்கள், அதற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

192 பேரை பஹ்ரைனிலிருந்து பேருந்துகளின் மூலம், சாலை வழியாக தமாம் நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தமாம் நகரில் இருந்து கல்ஃப் ஏர்வேஸ் சிறப்பு விமானம் மூலம், இந்த 192 பேரும் நேற்று முன்தினம் நள்ளிரவு சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களில் ஒரு சிலர் விமான டிக்கெட்டுக்கு பணம் இல்லாமல் தவித்தனர். அவர்களுக்கு பஹ்ரைன் தமிழ்ச் சங்கம் மற்றும் தொண்டு நிறுவனத்தினர், உதவியுடன் விமான டிக்கெட்டுகள் எடுத்து, சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அந்த சிறப்பு விமானம், சென்னை சர்வதேச விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்தது. அதில் வந்த 192 பேரும் குடியுரிமை, சுங்கத்துறை மற்றும் பாதுகாப்பு சோதனைகள் முடித்து வெளியில் வந்தனர்.

அவர்களை தமிழ் சங்கத்தை சேர்ந்தவர்கள், சென்னை விமான நிலையத்தில் வரவேற்று, அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தனர்.

# தேர்தல் நடத்தை விதிகளை அமல்படுத்த சென்னை விமான நிலையத்தில் அதிகாரிகள் நியமனம்



சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நடத்தை விதிகளை அமல்படுத்தும் விதமாக சென்னை விமான நிலையத்தில் சிறப்பு அதிகாரிகளை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்.23-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பு கடந்த மார்ச் 15-ம் தேதி வெளியான நிலையில், தமிழகம் முழுவதும், தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்து உள்ளன.

210 6 பறக்கும் படைகள், நிலை கண்காணிப்பு படைகள் சோதனையில் ஈடு பட்டு வருகின்றன. மேலும், விமான நிலையங்களையும் கண்காணிக்க தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

அதன் படி, சென்னை சர்வதேச விமான நிலையம், சென்னை விமான நிலைய கார்கோ பகுதி ஆகிய வற்றை கண்காணிக்க, சிறப்பு அதிகாரிகளை இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

சென்னை சர்வதேச விமான நிலையத்தின் வருகை, புறப்பாடு பகுதிகளில் சுங்கச் சோதனைகளை கண்காணிக்க, சுங்கத்துறை இணை ஆணையர் அந்தஸ்தில், சிறப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். சென்னை விமான நிலைய கார்கோ பகுதிகளில், சரக்குகள் ஏற்றுமதி, இறக்குமதி பகுதிகளில் சுங்கச்சோதனை பிரிவுகளில் கண்காணிப்பதற்காக இணை ஆணையர் அந்தஸ்தில் மற்றொரு சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

# சென்னை அருகே 46 கிலோ தங்க கட்டிகள் சிக்கியது: தேர்தல் பறக்கும் படை அதிரடி



தமிழ்நாட்டில் ஏப்ரல் 23-ந் தேதி சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. இதனால், தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட, கடந்த 15-ந் தேதி மாலை முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகளும் அமலுக்கு வந்தன. உடனடியாக, பறக்கும் படை சோதனையும் தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், சென்னை மாதவரம் அருகே தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, சரக்கு வாகனம் ஒன்றில் 46 கிலோ எடை கொண்ட தங்க கட்டிகள் சிக்கின. இதன் மதிப்பு ரூ.64 கோடியே 17 லட்சம் ஆகும்.

இது குறித்து விசாரித்தபோது, சென்னை தியாகராயநகரில் உள்ள பிரபல நகைக் கடையில் இருந்து பொன்னேரியில் உள்ள நகைப்பட்டறைக்கு எடுத்துச் செல்வதாக டிரைவரும், அவருடன் வந்த ஊழியரும் கூறியுள்ளனர்.

இதுகுறித்து தேர்தல் ஆணைய உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, 46 கிலோ தங்க கட்டிகளும் பறிமுதல் செய்யப்பட்டன. தங்க கட்டிகளுக்கான உரிய ஆவணத்தை காட்டினால், திருப்பி வழங்குவோம் என்று தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர். சென்னையில் ஒரே இடத்தில் 46 கிலோ தங்க கட்டிகள் சிக்கியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.






# அரசுக்கு சொந்தமான மகளிர் சுய உதவி குழு கல்குவாரி செயல்பட தடையால் 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வாழ்வாதாரம் பாதிப்பு

## கல்குவாரி செயல்பட மாவட்ட நிர்வாகம் அனுமதி அளிக்க வேண்டும் என கோரிக்கை வலியுறுத்தி ஏ.ஐ.டி.யூ.சி தொழிலாளர்கள் சார்பில் அகிம்சை போராட்டம்



தேனி மாவட்டம் கம்பம் அருகே காமயக்கவுண்டன்பட்டியில் அரசுக்கு சொந்தமான சங்கிலிக்கரடு கல்குவாரி செயல்பட்டு வருகிறது மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் கல்குவாரி பணிகளில் ஏராளமான தொழிலாளர்கள் ஈடுபட்டு வந்தனர்

இந்த நிலையில் கடந்த ஆறு மாத காலமாக கல்குவாரி செயல்படுவதற்கான உரிமத்தை மாவட்ட நிர்வாகம் வழங்காததால் மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் சுமார் 500க்கும் மேற்பட்ட கல் உடைக்கும் தொழிலாளர்கள் குடும்பத்தினர் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஏ.ஐ.டி.யூ.சி சார்பில் கல்குவாரி தொழிலாளர்கள் அகிம்சை போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்

கடந்த ஆறு மாத காலமாக கல்குவாரி செயல்படுவதற்கு தடை விதித்திருப்பதால் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் சுமை அதிகரித்து இருப்பதாகும் அதனை நம்பி இருக்கும் சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு இருப்பதாக கூறி அகிம்சை வழியில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்

கல்குவாரியை மீண்டும் செயல்படுவதற்காக உரிமத்தை மகளிர் சுய உதவி குழுவிற்கு வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கைஎடுக்கவேண்டும் என கோரிக்கையை வலியுறுத்தி மகளிர் சுய உதவிக் குழு பெண்கள் மற்றும் ஏஐடியூசி தொழிலாளர்கள் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று (20.03.2026) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு "வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை" குறித்த விழிப்புணர்வு உறுதிமொழியினை அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று (20.03.2026) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மகளிர் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுவினர்கள் மூலம் வாக்காளர்கள் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திடும் வகையில் போடப்பட்ட தேர்தல் தொடர்பான கருத்துக்கள் அடங்கிய விழிப்புணர்வு குறித்த கோலப்போட்டியினை பார்வையிட்டார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி 98.ஈரோடு கிழக்கு மற்றும் 99. ஈரோடு மேற்கு ஆகிய சட்டமன்றத்தொகுதிகளுக்கான தேர்தல் பொதுப்பார்வையாளர் எஸ்.மினிஸ்தி, மற்றும் 100. மொடக்குறிச்சி மற்றும் 103. பெருந்துறை ஆகிய சட்டமன்றத்தொகுதிகளுக்கான தேர்தல் பொதுப்பார்வையாளர் பார்தி தீக்ஷித், மற்றும் 99. ஈரோடு மேற்கு 100. மொடக்குறிச்சி ஆகிய சட்டமன்றத்தொகுதிகளுக்கான தேர்தல் செலவினப்பார்வையாளர் ஹலட்கர் ராஜேஷ் நம்தேவ், ஆகியோர் (19.03.2026) அன்று வாக்கு எண்ணும் மையமான சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள் இந்த ஆய்வின் போது தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவித்தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் பொறுப்பு அலுவலர்கள் உடனிருந்தார்கள்.

# பாஜக கூட்டணியில் நீடிக்கிறோம்; சந்தேகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்த புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி



தூத்துக்குடி: வியூகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக, சட்டமன்ற தேர்தலில் பாஜக உடனான கூட்டணியில் நீடித்து வருகிறோம் என்று திருச்செந்தூர் முருகனை தரிசனம் செய்த பின்னர் புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி தெரிவித்தார்.

தமிழகத்தைப் போலவே புதுச்சேரி சட்டமன்ற தேர்தல் களமும் மிகவும் பரபரப்புடன் சூடுபிடித்துக் காணப்படுகின்றது. மேலும், என்ஆர் காங்கிரஸ் மற்றும் பாஜக இடையிலான கூட்டணி அமையுமா? அமையாதா? என்பதே இப்போது புதுச்சேரி அரசியல் களத்தின் மிகப் பெரிய சந்தேகப் பொருளாக மாறியிருக்கின்றது. சமீபத்தில்கூட பாஜக தேர்தல் பொறுப்பாளர் மன்சுக் மாண்ட்வியாவுடன் நடக்கவிருந்த பேச்சுவார்த்தையை முதலமைச்சர் ரங்கசாமி ரத்து செய்ததாகவும், அவருடைய நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே கூட்டணி இறுதிச் செய்யப்படும், இல்லையெனில் கூட்டணியில் இருந்து வெளியேறிவிடுவோம் என பகிரங்கமாக தெரிவித்ததாகவும் தகவல்கள் வெளியாகின.


ஆகையால், என்ஆர் காங்கிரஸ் - பாஜக இடையில் கூட்டணி அமைவதில் இழுபறி நீடிப்பது உறுதியானது. இந்த மாதிரியான சூழலிலேயே தாங்கள் இப்போதும் பாஜக கூட்டணியில் நீடித்து வருவதாக புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி தெரிவித்துள்ளார். சமீபத்தில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் அமைந்துள்ள முருகனின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் அவர் சுவாமி தரிசனம் செய்தார்.

தமிழகத்தின் பிரசித்தி பெற்ற ஆன்மீக சுற்றுலா தளங்களில் இதுவும் ஒன்றாக விளங்கி வருகின்றது. ஆகையால் இங்கு தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வருகை தந்துக் கொண்டிருக்கின்றனர். பொதுமக்கள் மட்டுமின்றி அரசியல் முக்கிய பிரமுகர்கள், சினிமா பிரபலங்களும் இங்கு சுவாமி தரிசனம் செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

நேற்றிரவு சுமார் 9 மணியளவில் திருச்செந்தூர் முருகனை தரிசனம் செய்வதற்கு புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி வருகை தந்திருந்தார். தொடர்ந்து, கோயிலுக்குள் சென்ற அவர் முருகன்,வள்ளி,தெய்வானை, சண்முகர், பெருமாள், சத்ரு சம்ஹார மூர்த்தி, தட்சிணாமூர்த்தி என அனைத்து பரிவார தேய்வங்களையும் தரிசனம் செய்தார். பின்னர், கோயில் அர்ச்சகர்கள் உள்பட பலர் முதலமைச்சர் ரங்கசாமியுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

சாமி தரிசனத்துக்கு பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், "நான் திருச்செந்தூர் முருகனை தரிசனம் செய்ய வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளேன். அந்த வகையில் தான் இன்றைய தினம் திருச்செந்தூர் முருகனை தரிசனம் செய்தேன். நாங்கள் தொடர்ந்து பாஜக கூட்டணியில் நீடித்து வருகிறோம். வருகின்ற சட்டமன்ற தேர்தலுக்கான அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தைகள் பாஜக கூட்டணியுடன் தற்போது நடைபெற்று வருகிறது. தொடர்ந்து, இதுகுறித்த முடிவுகள் விரைவில் எடுக்கப்படும்" என்றும் ரங்கசாமி தெரிவித்தார்.

# மேற்காசிய பதற்றம் எதிரொலி: வரலாறு காணாத ரூபாய் சரிவு டாலருக்கு நகரும் முதலீட்டாளர்கள்



மும்பை: மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் பதற்றங்கள், கச்சாஎண்ணெய்விலை உயர்வு ஆகியவை காரணமாக வரலாறு காணாத அளவாக டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு ரூ.93.40 ஆக சரிந்தது.

முந்தைய வணிகத்தின் முடிவில் டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு ரூ.92.87 ஆக இருந்த நிலையில் இன்று அது ரூ.93.40 ஆக உயர்ந்து வணிகமாகி வருகிறது. இது முன் எப்போதும் இல்லாத சரிவாகும். அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது கடந்த பிப். 28ம் தேதி தாக்குதலை தொடங்கியதை அடுத்து, இவ்விரு நாடுகளுக்கும் எதிராக ஈரான்பதிலடிகொடுத்து வருகிறது. இஸ்ரேலின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் மீதான தாக்குதல் உட்பட அந்நாட்டுக்கு எதிராக தொடர் தாக்குதல்களை நடத்தி வரும் ஈரான், அமெரிக்காவுக்கு ஆதரவாக செயல்படும் வளைகுடா நாடுகள் மீதும் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

அதோடு, வளைகுடா நாடுகளின் முக்கிய கடல் வழித்தடமான ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியுள்ளது. இதனால், உள்ளே உள்ள கப்பல்கள் வெளியே செல்ல முடியாமலும், வெளியே உள்ள கப்பல்கள் உள்ளே செல்ல முடியாமலும் உள்ளன. இது கச்சா எண்ணெய் தட்டுப்பாடு பரவலாக்கத்துக்கு வழி வகுத்துள்ளது.

கச்சா எண்ணெய் விலை 94.5 டாலராக உள்ளது. உயர்ந்த தரம் கொண்ட பிரென்ட் கச்சாஎண்ணெய்விலை 107.65 டாலராக உள்ளது. டாலர் மூலமாகவே எண்ணெய் வர்த்தகம் நடைபெறுவதால் டாலருக்கான மதிப்பும் உயர்ந்து வருகிறது.

டாலர் மதிப்பு உயர்வதால், இந்திய பங்குச் சந்தையில் முதலீடுகளை செய்திருந்த முதலீட்டாளர்கள் தங்கள் முதலீட்டை விற்றுவிட்டு டாலரை நோக்கி நகருகிறார்கள். இதனால், இந்திய பங்குச் சந்தை கடும் சரிவைச் சந்தித்து வருகிறது. டாலரின் மதிப்பு உயர்வதால் ரூபாயின் மதிப்பும் சரிந்து வருகிறது. வட்டி விகிதங்களைக் குறைப்பதற்கான வாய்ப்பு ஏறக்குறைய இல்லை என்பதாக அமெரிக்க ஃபெடரல் ரிசர்வ் எடுத்துள்ள நிலைப்பாடு காரணமாக, டாலர் வலுவாகவே இருந்து வருகிறது. இது முதலீடுகளை ஈர்த்து வருகிறது. இந்தியாவில் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதற்காகவும், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலை கடுமையாக உயர்வதைத்தடுக்கும் நோக்கிலும் ரஷ்யா உட்பட வேறு பல நாடுகளிடம் இருந்து இந்தியா அதிக அளவில் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து வருகிறது. இதனால், இந்தியா அதிக அளவில்டாலரைவாங்குகிறது. புவிசார் அரசியலில் ஏற்பட்டிருக்கும் நிலையற்றத் தன்மை காரணமாக இந்திய ரூபாயின் மதிப்புதொடர் சரிவைச் சந்தித்து வருகிறது.

# தேர்தல் பறக்கும்படை அதிகாரிகள் சென்ற கார் விபத்து: எஸ்ஐ உட்பட 4 பேர் காயம்

சென்னை:

தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் சென்ற கார் விபத்தில் சிக்கியதில் எஸ்.ஐ. உட்பட 4 பேர் காயம் அடைந்தனர். தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அரசியல் கட்சியினர் பணம், பரிசுப் பொருட்களை கொடுத்து வாக்காளர்களை கவர்ந்து விடக்கூடாது என்பதில் தேர்தல் ஆணையம் உறுதியாக உள்ளது.

அதன்படி, சட்டவிரோத பணப்பரிமாற்றத்தைத்தடுக்கதேர்தல் பறக்கும் படை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த படையினர் வாகன சோதனை மற்றும் தணிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுடன் போலீஸாரும் ஒருங்கிணைந்து பணியாற்றுகின்றனர். இந்நிலையில், புழல் சூரப்பட்டு அருகே 200 அடிசாலையில் மாதவரம் சட்டப்பேரவை தொகுதி பறக்கும் படை அதிகாரிகள் நேற்று முன் தினம் காரில் சென்றனர்.

அப்போது,ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த கார்,

சாலைநடுவே இருந்த தடுப்பு சுவரில் மோதி விபத்துக்குள்ளானது. இதில், காரில் இருந்த பறக்கும் படை அதிகாரி சுரேந்தர், போலீஸ் எஸ்.ஐ. ராமச்சந்திரன், காவலர் ஆரிப், வீடியோகிராபர் விஸ்வநாதன் ஆகிய 4 பேர் காயம் அடைந்தனர்.

உடனடியாக அவர்கள் மீட்கப்பட்டு, ரெட்டேரியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இந்த விபத்து தொடர்பாக போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு போலீஸார் விசாரித்து வருகின்றனர்.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (20.03.2026) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி சாமிநாதபுரத்தில் பத்மபூஷன் விருதுபெற்ற எஸ்.கே.எம்.மயிலானந்தன் முன்னிலையில் ஈரோடு மாவட்ட தனித்துவ தேர்தல் அடையாள சின்னமான சிங்க முகத்துடன் கூடிய தேர்தல் அரசன் சின்னத்தினை அறிமுகப்படுத்தினார்.



ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே பண்ணாரி மாரியம்மன் கோவில் குண்டம் திருவிழா மார்ச் 31ல் நடைபெறுகிறது. இதற்காகப் பல்லாயிரக்கணக்கான உள்ளூர் மற்றும் வெளிமாநிலப் பக்தர்கள் திரள்வார்கள் என்பதால், பாதுகாப்புப் பணியில் போலீசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாவட்ட எஸ்.பி கிரண் ஸ்ருதி நேரில் பார்வையிட்டு, கோவில் அதிகாரிகளுடன் விரிவான ஆலோசனை மேற்கொண்டார்.

# தமிழகத்தில் மார்ச் 26 வரை சில இடங்களில் மழைக்கு வாய்ப்பு

சென்னை: தமிழகத்தில் ஓரிரு இடங்களில் 26-ம் தேதி வரை மழை நீடிக்க வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மன்னார் வளைகுடா முதல் வட கர்நாடகாவின் உள்பகுதி வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளையும், நாளை மறுநாளும் (மார்ச் 21, 22) மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதைத் தொடர்ந்து, 26-ம் தேதி வரை லேசான மழை நீடிக்கும். இதர பகுதிகளில் வறண்ட வானிலை நிலவும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். வெப்பநிலை 77 டிகிரி முதல் 93 டிகிரி ஃபாரன்ஹீட் வரை இருக்கும்.

தமிழகத்தில் 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சேலம் மாவட்டம் எடப்பாடியில் 9 செ.மீ., சங்கரி துர்க்கம், கடலூர் மாவட்டம் வேப்பூர், நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் 8 செ.மீ., சேலம் மாவட்டம் மேட்டூரில் 7 செ.மீ., சந்தியூர், கரூர் மாவட்டம் குளித்தலை, கடலூர் மாவட்டம் லக்கூரில் 6 செ.மீ., தென்காசி மாவட்டம் குண்டாறு அணை, அரியலூர் மாவட்டம் செந்துறை, கடலூர் மாவட்டம் கீழச்செருவை, கள்ளக்குறிச்சியில் 5 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.





ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே உள்ள கடம்பூர் மலை கிராமம் குத்தியாளத்ததூரில் நில வருவாய் ஆய்வாளர் ராஜசேகர் மற்றும் அதிகாரிகள் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்வு நடத்தினர். பேருந்து நிலையம் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில், தேர்தலில் வாக்களிப்பது ஒவ்வொருவரின் கடமை என விளக்கி துண்டு பிரசுரங்கள் வழங்கினர். மேலும் வாக்குப்பதிவின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

# வாக்குப் பதிவு தினத்தன்று பொதுவிடுமுறை: தமிழக அரசுக்கு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தல்

சென்னை: தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு நடைபெறும் ஏப் .23-ம் தேதி அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு பொது விடு முறை விட வேண்டும் என்று தமிழக அரசுக்கு, தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

தமிழக சட்டப்பேரவைக்கான தேர்தல் வாக்குப்பதிவு வரும் ஏப்.23-ம் தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தலில் 2.90 கோடி பெண், 2.78 கோடி ஆண், 7 ,656 திருநங்கைகள் என மொத்தம் 5.69 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

இந் நிலையில், தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசு, பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்கள், அனைத்து கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கு ஏப்.23-ம் தேதி சம்பளத்துடன் கூடிய பொது விடு முறை விட வேண்டும்.

தொழிலாளர் பணியாற்றும் தொகுதியில் தேர்தல் நடைபெறாவிட்டாலும், தேர்தல் நடைபெறும் தொகுதியில், அந்த தொழிலாளி வாக்காளராக இருந்தால் அவர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பு அளிக்க வேண்டும்.

தினக்கூலி தொழிலாளராக இருந்தாலும் விடுப்பு அளிக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு, இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது.



# தூத்துக்குடி மாணவி கொலை வழக்கு: 10 நாட்களுக்கு பிறகு உடல் உறவினர்களிடம் ஒப்படைப்பு



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் அருகே வேடநத்தம் கிராமத்தில் கடந்த மார்ச் 10-ம் தேதி இயற்கை உபாதை கழிக்கச் சென்ற மாணவி, மர்ம நபர்களால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார். அவரது உடல் முட்புதரில் கண்டெடுக்கப்பட்ட நிலையில், குற்றவாளியைக் கைது செய்யும் வரை உடலைப் பெறப்போவதில்லை எனப் பெற்றோர்களும் கிராம மக்களும் 9 நாட்களுக்கும் மேலாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தச் சூழலில், தொழில்நுட்ப ஆதாரங்கள் மற்றும் சி.சி. டி.வி. காட்சிகள் மூலம் தர்ம முனீஸ்வரன் என்ற முக்கியக் குற்றவாளியைத் தனிப்படை போலீசார் அதிரடியாகக் கைது செய்தனர். குற்றவாளி கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, மாணவியின் உடலைப் பெற்றுக்கொள்ளப் பெற்றோர்கள் சம்மதம் தெரிவித்தனர்.

தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த மாணவியின் உடல், இன்று காலை சட்டப்பூர்வ நடைமுறைகளுக்குப் பிறகு அதிகாரிகளால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. பலத்த பாதுகாப்புடன் மாணவியின் உடல் அவரது சொந்த ஊருக்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு இன்று மதியம் இறுதிச்சடங்குகள் செய்யப்பட்டு உடல் தகனம் செய்யப்படுகிறது.

குற்றவாளி கைது செய்யப்பட்டிருந்தாலும், அவருக்கு நீதிமன்றம் மூலம் மிகக் குறுகிய காலத்திற்குள் உச்சபட்ச தண்டனையான தூக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என மாணவியின் குடும்பத்தினரும் சமூக ஆர்வலர்களும் வலியுறுத்தி வருகின்றனர். கிராமம் முழுவதும் சோகத்தில் மூழ்கியுள்ள நிலையில், அசம்பாவிதங்களைத் தவிர்க்க அந்தப் பகுதியில் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# சேலத்தில் அரசுப் பேருந்து கோர விபத்து; கர்ப்பிணி உள்பட 8 பேர் உயிரிழப்பு

சேலம்: கட்டுப்பாட்டை இழந்த அரசுப் பேருந்து சரக்கு வாகனம் மீது மோதிய விபத்தில் 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கோவை மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து பயணிகளுடன் அரசுப் பேருந்து ஒன்று இன்று மதியம் (மார்ச் 20) சேலம் நோக்கிச் சென்றுக் கொண்டிருந்தது. பெங்களூரு-கோவை தேசிய நெடுஞ்சாலையில் உத்தமசோழபுரம் என்ற இடத்தை பேருந்து கடந்து செல்லும்போது திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து, சாலையின் தடுப்பை உடைத்துக்கொண்டு எதிர்புறம் சாலையை நோக்கி பாய்ந்தது. அப்போது எதிர்புற சாலையில் வந்த டெம்போ வாகனத்தின் மீது பேருந்து பலமாக மோதியது.




இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே கர்ப்பிணி பெண் உள்பட 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். டெம்போவில் பயணித்த செல்வராஜ், முருகன், அமுதா, நித்திஷ்கா, ஜீவிகா மற்றும் கர்ப்பிணி சத்யா ஆகியோரும், இருசக்கர வாகனத்தில் பயணித்த இருசாயி, மணிகண்டன் ஆகிய இருவரும் என மொத்தம் 8 பேர் உயிரிழந்தனர்.

இந்த கோர விபத்து குறித்து தகவலறிந்த கொண்டலாம்பட்டி காவல்துறையினர், சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மீட்புப் பணிகளை முடுக்கிவிட்டனர். பேருந்தில் காயமடைந்த பயணிகள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். எனினும், பேருந்தில் பயணித்தவர்களில் எத்தனை பேருக்கு காயம் அடைந்தனர், ஓட்டுநர் மற்றும் நடத்துநரின் நிலை குறித்து தகவல் இதுவரை அதிகாரப்பூர்வமாக வெளியாகவில்லை. மேலும், உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதனிடையே, விபத்து குறித்த சிசிடிவி காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில், "சேலம் - உத்தமசோழபுரம் பகுதியில், கோயம்புத்தூரிலிருந்து சேலம் நோக்கி வந்த தமிழ்நாடு அரசுப் பேருந்து திடீரென கட்டுப்பாட்டை இழந்தது. சாலையோர தடுப்பை உடைத்து எதிர்புறம் சென்ற வாகனங்கள் மீது அதிவேகமாக மோதியதில் 7 பேர் உயிரிழந்தனர் என்ற செய்திகள் வருகின்றன, வருத்தத்திற்குரிய இத்தகவல் அறிந்து மிகுந்த துயருற்றேன்.

தமிழ்நாட்டில் அரசுப் பேருந்துகள் விபத்துக்குள்ளாவது தொடர்கதையாகி உள்ள நிலையில், இந்த ஆட்சியில் அரசுப் பேருந்துகள் முறையாக பராமரிக்கப்படவில்லை என்பதையே இந்த சம்பவம் மீண்டும் ஒரு முறை நிரூபித்திருக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அதிமுக சார்பில் எனது ஆழ்ந்த இரங்கலையும் வருத்தங்களையும் தெரிவித்துக் கொள்வதுடன், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவோர் விரைவில் பூரண நலம்பெற்று இல்லம் திரும்ப இறைவனை வேண்டுகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.